துணைஇயக்குநர் (அமலாக்கம்) அவர்களின் செயல்முறைகள்
ஆணையிடுபவர்:- **திரு.க.முனுசாமி, துணைஇயக்குநர் (அமலாக்கம்)**
துணைஇயக்குநர் (அமலாக்கம்) அலுவலகம், சென்னை-108

*****

**ந.க.எண்.466/2020/அமலாக்கம், நாள்.07.09.2021.**

பொருள்: நிர்வாகம் - கைத்தறி மற்றும் துணிநூல் துறை - அமலாக்க பிரிவு - 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை, துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்ட திரு.ச.பிரசாந்த், இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம், எண்.2380/PSD-I/2020, நாள். 30.05.2020.

2. சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண். 14680/2020/இ2-3, நாள்.14.08.2020.

-----

ஆணை:

பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018-2019 மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான தொகுதி-IV-க்குட்பட்ட நேரடி நியமன தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு பார்வை (2)ல் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது. அவர்களில், சென்னை, துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்ட **திரு.ச.பிரசாந்த்** என்பவர் 24.08.2020 மு.ப. துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து, நாளது தேதி வரை பணிபுரிந்து வருகிறார்.

2) மேற்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, சென்னை, துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் **திரு.ச.பிரசாந்த்,** இளநிலை உதவியாளரின் பணியானது, தனியர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 24.08.2020 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் பணி நிலையில் வரன்முறைப்படுத்தப்பட்டு ஆணையிடப்படுகிறது.

3) மேலும், தனியரது பணிவரன்முறையானது, 2018-19 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஒருங்கிணைந்த அமைச்சுப் பணிகளுக்கான தொகுதி-IV பணிநியமனம் தொடர்பாக சென்னை

சென்னை மற்றும் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள ரிட் மனு வழக்குகளின் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும் என்றும் ஆணையிடப்படுகிறது.

4) மேற்கண்ட பத்தி எண் 2ல் காணும் தனியரின் தகுதிகாண் பருவமானது இளநிலை உதவியாளர் பணிநிலையில் 24.08.2020 மு.ப. முதல் தகுதிகாண்பருவ தொடக்க நாளாக கணக்கிடப்படும். மேற்படி தனியர் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

7/9/2021

துணை இயக்குநர் (அமலாக்கம்)

பெறுநர்

சம்மந்தப்பட்ட தனியர்.

7/9/2021

நகல்

1) சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை.
2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
3) பணிப்பதிவேடு.
4) முதன்மைச் செயலர் / கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்கள், சென்னை - 108. - தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
5) இருப்புக்கோப்பு.